**வட.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 31/2017**

எனது இல - **NP/07/10/02/112**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.
***14.11.2017***

**பிரதம செயலாளர்,**
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
**வடக்கு மாகாணம்.**

## மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2013 (I) 2017

***2013.12.11*** ஆந் திகதிய ***1840/ 34*** ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பினைத் தழுவித் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச முகாமை உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் பந்தி *8* மற்றும் பந்தி *15* ஆகியவற்றினது ஏற்பாடுகள், இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இணைப்பு *5* இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் IIஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் **2018 மாசி மாதம்** நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*02.* (i) இப்புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு முன்னர் நடைமுறையிலிருந்த சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக தரம் IIஇலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்திராத ஆனால் *(1)* அலுவலக முறைமையும் நடைமுறைகளும், *(2)* அரசாங்க அலுவலகங்களில் பாவிக்கப்படும் கணக்கீட்டு முறைமைகள் என பெயர் குறிப்பிடப்பட்ட இப்பரீட்சையின் இரண்டு பாடங்களையுமோ அல்லது அவற்றில் ஒன்றையோ சித்தியெய்தி அல்லது விலக்களிப்புப் பெற்றுள்ள அலுவலர்கள் பாடத்துக்குப் பாடம் என்ற அடிப்படையில் இச்சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட தரம் IIஇலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையின் உரிய பாடங்களிலிருந்து விலக்களிப்புப் பெறுதல் வேண்டும்.

(ii) இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அமுலாக்கத் திகதிக்கு முன்னர் தரம் IIஇற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள் பதவியுயர்வு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு *(6)* வருடங்கள் பூர்த்தி செய்வதற்கு முன்னர் தரம் IIஇற்கு உரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை சித்தியெய்துதல் வேண்டும்.

*03.* மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் IIஇல் உள்ள அலுவலர்களுக்காக இப்பரீட்சை யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். இந்நகரங்களுக்கு ஏற்புடையதான நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. போதிய அளவிலான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காமை அல்லது வேறு காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச் செய்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்பப்படி அந்நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிவு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்ந்திருக்கும். விண்ணப்பம் செய்துள்ள நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | *10* |
| மன்னார் | *11* |
| முல்லைத்தீவு | *12* |
| கிளிநொச்சி | *25* |

*04.* (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கும் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

(ii) பரீட்சார்த்திகளின் பொருட்டு விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

*05.* **தகைமைகள் :** மாகாண அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் II இன் நியமனமொன்றைப் பெற்றுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர். தரம் II இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து மூன்று *(03)* வருடங்களுக்குள் இப்பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

*06.* இப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். இம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக **2017.12.04**ஆம் திகதி அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியவாறு ***“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.”*** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும் உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*07.* **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்:-** பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*08.* **விண்ணப்பங்கள் :-**

**08.1** இல *1* முதல் *5* வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் A4 அளவினதான ஒரு தாளில் விண்ணப்பமானது தயார் செய்தல் வேண்டும். விண்ணப்பம் கணினியில் தயாரித்துக் கொள்ளப்படுமாயின் இவ்விண்ணப்பம் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்து மூலம் சரியாகவும், தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

***08.2*** விண்ணப்பப் படிவமானது இத்துடன் உள்ள படிவத்திற்கேற்ப தயார் செய்தல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மட்டுமே அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்பிவைத்தலாகாது என அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமை பெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிப்பேதுமின்றி நிராகரிக்கப்படும்.

***08.3*** விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இருப்பது தொடர்பில் பரீட்சார்த்தியே கவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

***08.4*** முதன்முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதன் பின்னரான அமர்வுகளின் போது அலுவலர்கள் ஒரே அமர்வில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா *500/-*யும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா *250/-*யும் விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகமொன்றில் "**வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர்**" அவர்களின் "***3401***" என்ற வைப்புக் கணக்கிற்கு செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியைத் விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் முடியாது.

*09.* விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டையும் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தங்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பான அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சைத் திணைக்களம் பத்திரிகைகளில் வெளியிடும். அறிவிப்பு வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். தங்களிடம் இருக்கும் விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருந்தால் உரிய பற்றுச்சீட்டின் பிரதி, தங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி, பரீட்சையின் பெயரையும் மற்றும் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையை உங்களுக்கு அனுப்ப ஏதுவாக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதமொன்றை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது அதிக பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

***குறிப்பு :-*** விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதியட்டை அனுப்புதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதலாகாது.

*10.* பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

11. விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை நிறுவனத் தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரின் மூலம் சான்றுப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

12. இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் உரிய சேவைக்கான நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். போட்டிப் பரீட்சையின்றி சேவையில் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. உத்தியோத்தர்கள் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகவும் வெவ்வேறு தடவைகளிலும் தோற்றலாம். ஆயினும் சித்தியெய்துவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது (40%) வீதம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

14. அரச கரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்கு அமைய சகல அலுவலர்களும் தமது விண்ணப்பங்களை அரசகரும மொழியில் தயார்படுத்த வேண்டியதுடன் அம்மொழியினாலேயே அதை நிரப்பவும் வேண்டும்.

15. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்படும். அத்துடன் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளினது பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் அனுப்பி வைக்கப்படும்.

16. ***பரீட்சைத் திட்டம் :-*** பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| அலுவலக முறைகளும் நடைமுறையும் | 01 | 100 | 2 மணித்தியாலம் |
| அரசாங்க அலுவலகங்களில் கையாளப்படும் கணக்கு முறைகள் | 02 | 100 | 2 மணித்தியாலம் |
| **மொத்தம்** | | **200** | |

***16.1 அலுவலக முறைகளும் நடைமுறையும்*** :- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :-

பகுதி I – பல்தேர்வு வினாத்தாள் **(காலம் 30 நிமிடம்) - 25 புள்ளிகள்**

பகுதி II – பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள், 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் **(காலம் 90 நிமிடம்) - 75 புள்ளிகள்**

***16.2 அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தும் கணக்கு முறைகள்*** :- அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணக்கு முறைகள், கணக்கு பதிவேடுகள், அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல் இவ்வினாத்தாளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை கொண்டிருக்கும்

பகுதி I – பல்தேர்வு வினாத்தாள் **(காலம் 30 நிமிடம்) - 25 புள்ளிகள்**

பகுதி II – பகுதி கட்டமைப்புடன் கூடிய கட்டுரை வினாத்தாள் 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் **(காலம் 90 நிமிடம்) - 75 புள்ளிகள்**

17. தயவு செய்து இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினைத் தங்கள் அமைச்சின் / திணைக்களங்களின் /அலுவலகத்தின் கீழ்க் கடமையாற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்குத் தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் இத்தகவல்களை வடமாகாண இணையத்தளமான www.np.gov.lk எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

**கவனிக்கவும் :-** இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும் என்பதுடன் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் தமிழ் மொழியே மேலோங்குதல் வேண்டும்.

**சி.ஏ.மோகன்ராஸ்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

பிரதி:-

- சகல பிரதேச செயலாளர்கள், வடக்கு மாகாணம்.
  - மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணத்தைப் பெற்று எமக்கு அனுப்பிவைக்கும் பொருட்டு.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

*மாதிரி விண்ணப்பப் படிவம்*

## மாகாண அரச முகாமை உதவியாளர்கள் சேவையில் தரம் IIஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை –2013 (I) 2017

## EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE II OF PROVINCIAL PUBLIC MANAGEMENT ASSISTANTS' SERVICE – 2013 (I) 2017

மாகாணம் : - வடக்கு மாகாணம் **04**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
- சிங்களம் - 2
- தமிழ் - 3
- ஆங்கிலம் - 4

(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(அறிவித்தலின் 03ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தைக் குறிப்பிடவும். இது பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

1

1.1 முழுப்பெயர் :(ஆங்கிலப் பெரிய எழுத்தில்) உ + ம் :- HERATH MUDIYAN SAMAN GUNAWARTHANA

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

1.2 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு பெயர் :(ஆங்கிலப் பெரிய எழுத்தில்) உ + ம் GUNAWARTHANA.H.M.S.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

1.3 முழுப்பெயர் : (தமிழில் / சிங்களத்தில்)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

2 சேவையாற்றும் இடமும் முகவரியும் :-

2.1 அலுவலகத்தின் / திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கிலபெரிய எழுத்தில்) :…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

2.2 அலுவலகத்தின் / திணைக்களத்தின் / நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : (தமிழில் / சிங்களத்தில்)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : (ஆங்கிலபெரிய எழுத்தில்)

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3. பால்(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

(பெண் - 1 ஆண் - 0)

4. தேசிய ஆளடையாள அட்டையின் இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. நீங்கள் இம்முறை தோற்ற உள்ள பாடம் / பாடங்கள்

| பாடம் | பாட இல |
|---|---|
| 1. | |
| 2. | |

6. தற்போது வகிக்கும் பதவி
   6.1 பதவி :…………………………………………………………………………………………………
   6.2 நியமனக் கடிதத்தின் இலக்கம் :- …………………………………………………………………………
   6.3 மாகாண முகாமை உதவியாளர் சேவையின்
   தரம்II இற்கு நியமனம் பெற்ற திகதி :…………………………………………………………………

7.
   7.1 நீங்கள் இப் பரீட்சைக்கு முதன்முதலாகத் தோற்றுகின்றீர்களா ? ……………………………………
   7.2 முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் செலுத்திய பரீட்சைக் கட்டணம்.: ரூபா…………
   7.3 பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட அலுவலகம் :-………………………………………………………
   7.4 பற்றுச்சீட்டு இலக்கம் :-………………………………………………………
   7.5 திகதி :- ………………………………………………………

| |
|---|
| *பற்றுச் சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும்.*<br>(பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்) |

8. மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும், நான் பரீட்சைக்கு …….. முறையாகத் தோற்றுகின்றேன் என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தத்தேவையில்லை என்றும்/ பரீட்சைக் கட்டணம்ரூபா …………. பெறுமதியான பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட ……………………………………… பிரதேச செயலகத்தின் ……………………… ஆம் இலக்க ……………………… ஆந் திகதிய பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்துகிறேன். இப் பரீட்சை தொடர்பில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் மற்றும் பரீட்சைச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

திகதி: ………………………… ……………………………………………
பரீட்சார்த்தியின் கையொப்பம்

**குறிப்பு** : பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அந்தத் திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

9. **<u>கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்</u>**

திரு/திருமதி/செல்வி …………………………………………. எனது அலுவலகத்தில் சேவையாற்றும் அலுவலர் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ………………………………… ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அவர் முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சைக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் / உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

……………………………………………..
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

பெயர் : ……………………………………….
பதவிப் பெயர் : ………………………………..
முகவரி :………………………………………
திகதி :…………………………………………

10. **<u>திணைக்களத் தலைவரின் சான்றிதழ்</u>**

1. மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும்,
2. அவர் இணைந்த சேவையில் உள்ளவர் என்றும்,
3. அலுவலர் இப்பரீட்சைக்கு இதற்கு முன் தோற்றினார் / தோற்றவில்லை என்றும்,
4. அலுவலர் இதற்கு முன்பு பரீட்சைக்குத் தோற்றியிருப்பதனால் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டுள்ளதென்றும்,
5. அலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும், இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

……………………………………………
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்

பெயர் : …………………………………………
பதவிப் பெயர் : ……………………………….
முகவரி :…………………………………………
திகதி :…………………………………………